**கவிதைப் போட்டி -4**

**நாளைய தலைமுறையின் இன்றைய கனவு (15)**

புத்தம் புதுக் காலை வேண்டும்
நித்தம் ஒரு கனவு மெய்பட வேண்டும்
வேண்டும் வேண்டும் மாற்றம் வேண்டும்
நாடெங்கும் அமைதி வேண்டும்
உலகெங்கும் ஒற்றுமை வேண்டும்
ஊழல் அற்ற அரசியல் வேண்டும்
சமூகத்தில் சமத்துவம் வேண்டும்
இல்லத்தில் நல்லுறவு வேண்டும்
வேண்டும் வேண்டும் மாற்றம் வேண்டும்
நாட்டில் அறியாமை ஒழிக்கப்பட வேண்டும்
வீட்டில் வறுமை நீங்க வேண்டும்
நவீன உலகத்தின் தனிமை ஒழிய வேண்டும்
மனிதனின் பேதைமை நீக்கப்பட வேண்டும்
பெண் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்
நாளைய தலைமுறைக்கான விடியல் வேண்டும்
வேண்டும் வேண்டும் மாற்றம் வேண்டும்
இன்றைய மாற்றம் நாளைய தலைமுறையை மாற்றும்!

*************